முருகப்பெருமான் துணை

**மகான் சகாதேவன் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

17.04.2023, திங்கட்கிழமை

1. நவகோட்களும் நல்கி அருள
ஞானபண்டிதனார் மகாசக்தியாக
அவதாரம் புரிந்த அரங்க ஞானி
அண்ணலே உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது தகர் திங்கள்
குறைவிலா சதுர் திகதி சோமவாரம்
(சோபகிருது வருடம் சித்திரை மாதம் 4 ம் நாள், 17.04.2023 திங்கட்கிழமை)
தெரிவிப்பேன் அனுகூல ஆசி
தேசிகனுக்கு சகாதேவன் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உண்மை ஞான வழிகள் தானும்
ஞானதேசிகன் அருளுபதேசமாக
ஞானிகள் மேலான பூசையாகப் பரவி வர
4. வருகவே கலிவாழ் மக்கள்
வணங்கி அரங்கன் திருவடி பற்றி
முருகா என சடாட்சர தீட்சை
முழுமனதாய் ஏற்று பின்பற்ற
5. பின்பற்ற பிரச்சினைகள் விலகும்
பேதமற அரங்கன் தருகின்ற
இன்பமான அருளமுது உண்டு
இணைந்து அன்னதான சேவைவழி
6. வழிதனை வழிமொழிந்து ஏற்று
வையகம் எங்கும் தரும சேவை
தெளிவுபட செய்து நன்கு
தொடர்ந்து பொருளுதவி செய்து
7. செய்துமே எங்கும் தரும பலமாக
சேவை மிகுந்து நிற்கவே
அய்யமற அவரவர் கருமவினை
அகன்று பாதுகாப்பு பெறுவதுடன்

8. பெறுவதுடன் ஏவல் வஞ்சமிடர்
பொறாமை கண்ணடி அல்லல்
வறுமை கோள் தோடமிடரும்
வருமுலகில் அகன்று மாற்றம்
9. மாற்றமுடன் சர்வ யோகமும்
மகத்துவமுற தேட்டு தனவளம்
ஆற்றல்பட தேக மனபலமும்
ஆயுள் கீர்த்தியும் கண்டு சிறப்பர்
10. சிறப்பான சன்மார்க்க நெறி
சிந்தை தெளிவிப்பு தருவதுடன்
அறத்துடன் கூடிய வாழ்வாக்கி
அழியாமையும் தந்தருளக் கூடும்
11. கூடவே உலகமகா சக்திகளும்
குருவரங்கன் பலமாக இருக்க
நாடவே யாவர்க்கும் ஞானியாகும்
நல்வாய்ப்பு உறுதிபட அரங்கேறும்
அனுகூல ஆசி முற்றே

—சுபம்—